# வாணியம்பாடி பொதுக்கூட்டம்

## இந்தி கண்டனம்.

(நமது நிருபர்).

வாணியம்பாடி, ஜூலை. 1.

சென்ற 27—6—38 திங்கட் கிழமை மாலை 6 மணிக்கு முனிசிபல் கவுன்சிலர் தோழர் கோவிந்தராஜன் அவர்கள் தலைமையில் பெரியபேட்டை பாலாற்றில் ஓர் பொதுக் கூட்டம் நடைபெற்றது.

சில இளைஞர்கள் இடை இடையே உணர்ச்சி ததும்ப இந்தி கண்டனப் பாடல்கள் பாடினர். ஆம்பூர் தமிழ் பண்டிதர் சிவஞானம் அவர்களும், வேலூர் தோழர் ஜி. எம். அண்ணல் தங்கோ அவர்களும் தற்கால நிலைமையைப் பற்றியும், "இந்தி"யை கட்டாயபாடமாக்கியுள்ளதை மிக வன்மையாய் கண்டித்தும் சொற்பெருக்கு நிகழ்த்தினர்.

கூட்டம் இரவு 10-30 வரை நடைபெற்றது. ஜவுளி வியாபாரி தோழர் கிருஷ்ணசாமி செட்டியார் வந்தனோபசாரம் கூற கூட்டம் முடிவு பெற்றது.